# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஆகஸ்ட் 25, 2026

Fortnightly E-paper • August 10, 2026





## பார்ப்போம்! படிப்போம்! படைப்போம்!

சுப.வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## மௌனம் கலைப்பாரா விஜய்?

தலையங்கம்

## “பிள்ளைபெறும் இயந்திரமல்ல பெண்கள்!” பெரியாரைப் படியுங்கள்

முனைவர் காந்தி பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

திங்கள் இருமுறை ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஆகஸ்ட் 25, 2026 Fortnightly E-paper ● August 25, 2026


# பார்ப்போம்! படிப்போம்! படைப்போம்!

சுப.வீரபாண்டியன்

"தேர்தலோடு திவால் ஆகிவிட்டது திமுக...

இப்போது எங்கே இருக்கிறது அந்தக் கட்சி?" என்று கேட்பவர்களுக்குத் தெரியாது -

குருதி நாளத்தில் கொள்கையை ஏற்றி - இரு வண்ணக் கொடியை இறுகப்பற்றி -

"திராவிட மாடல் நாயகன் வாழ்க" என்று, அடிவயிற்றின் ஆழத்திலிருந்து அண்டம் அதிரக் குரல் கொடுக்கும் அந்தத் தொண்டனின் உணர்வில் ஆழ வேர் விட்டிருக்கிறது திமுக என்பது!

எனினும், திமுகழகத் தோழனே.... அது மட்டுமே நம் அடையாளம் அன்று!

பேசிப்பேசியும், எழுதி எழுதியும் வளர்ந்த இயக்கம், நம் திராவிட இயக்கம்! தலைவர்கள் மணிக்கணக்கில் பேசினாலும் அதனைக் கேட்பதற்கும், ஆயிரக்கணக்கான பக்கங்களில் எழுதினாலும், அதனைப் படிப்பதற்கும் திமுகவில் தொண்டர்கள் நிறைந்திருந்தார்கள்! அதுவே நம் கழகத்தின் அடையாளமும், பெருமையும் ஆகும்!

நம் தலைவர்கள் திரைப்படங்களில் வசனம் எழுதினார்கள். அது வளமான பாடப்புத்தகம் போல இருந்தது! நம் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள்! அவை மாலை நேரப் பல்கலைக் கழகங்களைப் போல இருந்தன!

அந்த மரபு விடுபட்டுப் போனால், நம் கழகத்தின் பெருமையும் தடைபட்டுப் போகும்!

எனவே படிக்கும் பழக்கத்தை, நம் கட்சித் தோழர்கள் ஒரு நாளும் கைவிட்டு விடக்கூடாது! படிப்பு என்பது வெறும் பழக்கம் இல்லை, அது ஒரு பண்பாடு!

திமுகவினரிடம் படிக்கும் பழக்கம் உண்டு என்பதைவிட, படிக்கும் பழக்கம் உள்ளவர்கள்தான் திமுகவினர் என்பதை நாம் கவனப்படுத்திக் கொள்ள வேண்டும்!

இன்று புதிதாய்ப் புறப்பட்டிருக்கும் சில கட்சியினர், ஓரிரு நிமிடங்கள் தங்கள் கைபேசிகளில், காட்சிகளைப் பார்ப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அவர்களைக் குறை சொல்ல முடியாது! அவர்களின் வரலாறு அவ்வளவுதான்! ஆனால் ஒரு நூற்றாண்டைக் கடந்து ஒளி வீசும் நம் இயக்கத்தின் வரலாறு நீண்டது, நெடியது! எனவே சின்னச் சின்னக் காட்சிகளைப் பார்ப்பதில் தவறில்லை என்றாலும், அது மட்டுமே நமக்குப் போதாது! படிப்பதே நமக்குப் பயன்தரும்!

அதனால்தான் நம் அன்பிற்குரிய தலைவர், தன்னைப் பார்க்க வரும்போது, பொன்னாடைகளோடு வரவேண்டாம், புத்தகங்களோடு வாருங்கள் என்கிறார்! அதன் பொருளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!

தனக்கு வரும் நூல்களை அவர் நாடெங்கும் அனுப்பி வருகிறார், கடல் கடந்து வாழும் திமுகவினரின் படிப்பகங்களுக்கும் கொடுத்து வருகிறார்! நம் கட்சியினர் எல்லோரும் தொடர்ந்து படியுங்கள் என்பதே அதன் பொருள்!

அனல் பறக்கும் அரசியல் சூழல்களுக்கு இடையிலும், நம் அன்புத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், பல்லாயிரக்கணக்கான பக்கங்களை எழுதிக் குவித்திருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

உடன்பிறப்பே என்று அழைத்து, எத்தனை கடிதங்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் தொடங்கி எத்தனை இலக்கியங்கள், எத்தனை அரசியல் கட்டுரைகள், எத்தனை எத்தனை சிறுகதைகள், நாவல்கள்! எண்ணிப் பார்க்கவே பெரும் வியப்பாக இருக்கிறது! ஒரு முழு நேர எழுத்தாளரால் கூட எழுதி முடிக்க முடியாத அளவிற்கு, எண்ணிறந்த நூல்களை, பன்னூறு பக்கங்களில் நமக்காக எழுதித் தந்துள்ளவர் நம் தலைவர் கலைஞர்!

தன் வாழ்க்கை வரலாற்றை, "நெஞ்சுக்கு நீதி " என்னும் பெயரில், ஆறு தொகுதிகளாக, 4162 பக்கங்களில் அவர் எழுதி முடித்திருக்கிறார்!

அது அவருடைய வரலாறு மட்டும் இல்லை, நம் தமிழினத்தின் வரலாறு, திராவிட இயக்கத்தின் வரலாறு, இடையிடையே இந்தியா மற்றும் உலகத்தின் வரலாறு!

இதுவரையில் அந்த நெஞ்சுக்கு நீதியைப் படிக்காத திமுக தொண்டர்கள் இருப்பின், இன்றே படிக்கத் தொடங்குங்கள்!

அவ்வளவு பெரிய புத்தகத்தை எப்படிப் படிப்பது என்று எண்ணி மலைக்க வேண்டியதில்லை! கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கலாம். ஒவ்வொரு நாளும் 15 நிமிடங்களையாவது படிப்பதற்கு நாம் ஒதுக்கிக் கொள்வோம்!

15 நிமிடங்கள் போதுமா என்று கேட்டால், கண்டிப்பாகப் போதாது! எனினும் இது ஒரு தொடக்கமாய் இருக்கட்டும்! படிக்கப் பழகி விட்டால், பிறகு நம்மை அறியாமலேயே நாம் அதற்குக் கூடுதல் நேரத்தை ஒதுக்கி விடுவோம்!

நல்ல நூல்களைப் படிக்கும் தொண்டர்களால்தான், நல்ல கட்சி இங்கே வலுப்பெறும்! நல்ல கட்சி வலுப்பெறும் போதுதான், நல்ல நாடு உருவாகும்!

கைபேசிகளில் ரீல்ஸ் எனப்படும் சிறிய சிறிய காட்சிகளப் பார்க்கும் நேரம் குறைவாகவும், படிக்கும் நேரம் கூடுதலாகவும் ஆகட்டும்! படிக்கப் படிக்க, பிறகு நூல்களைப் படைக்கும் பழக்கமும் தானாகவே வந்து விடும்!

வாருங்கள் தோழர்களே, பார்ப்போம், படிப்போம், படைப்போம்!

நன்றி - முரசொலி - 24.08.26

# திராவிட மாணவர் பேரவை - பொறுப்பாளர்கள் நியமனம்

**திராவிட மாணவர் பேரவையின் அமைப்புப் பணிகள் செவ்வனே நடந்திட, மாநிலத் துணைச் செயலாளர்கள், மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்களாக கீழ்காணும் தோழர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்!**

## நிர்வாகம்:

**க.ஸ்ரீனிவாஸ்**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்கள்]

**ந.முகம்மது கைப்**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்கள்]

**செ.நந்தகோபால்**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்கள்]

**ஜு.பிரைசிங் ஜோஸ்வா**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்கள்]

**சே.ஜோ.நிர்மல்**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: பாண்டிச்சேரி]

## மேலாண்மை:

**இரா.ரேவதி**, மாநிலத் துணைச் செயலாளர் [பொறுப்பு: இணையவழி, மாணவர் தொடர்பு, உறுப்பினர் சேர்க்கை மற்றும் அமைப்பு மேம்பாடு]

**து.கவின்**, மாநிலத் துணைச் செயலாளர் [பொறுப்பு: அமைப்பு நெறிமுறைகள், உள்விவகாரம், பத்திரிகை மற்றும் மக்கள் தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் வெளியீடு]

**தி.தினேஷ் பாபு**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் மாற்றுத்திறனாளர் நலன்]

**செ.ரௌதிரா**, மாநிலத் துணைச் செயலாளர்
[பொறுப்பு: மாணவர்கள் புத்தாக்கம், அறிவியல் மனப்பான்மை விழிப்புணர்வு, எதிர்காலத் திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு]

## ஒருங்கிணைப்பு:

**ம.கா.தமிழினி**, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்
[பொறுப்பு: சட்டக் கல்லூரி மற்றும் சட்டப் பல்கலைக்கழக மாணவர் உறவு மற்றும் மேம்பாடு, சட்ட விழிப்புணர்வு]

**நா.சத்தியபிரியன்**, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்
[பொறுப்பு: கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர் உறவு மற்றும் மேம்பாடு]

**மூ.பிரித்விராணி**, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்
[பொறுப்பு: குருதிக்கொடை, உடல் உறுப்புக்கொடை, குருத்தணுக்கள் கொடை மற்றும் விழிப்புணர்வு பாசறை]

**இல.அருணோதயன்**, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்
[பொறுப்பு: சமூக வலைத்தள கருத்து வடிவமைப்பாளர் ஒருங்கிணைப்புப் பாசறை]

**மோ.ரூபஸ்**, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்
[பொறுப்பு: அரசியல் விழிப்புணர்வு மற்றும் சட்டப் பாதுகாப்பு பாசறை]

தோழமையுடன்
**சிற்பி செல்வராசு**
பொதுச்செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

# கடலூரில் பயிலரங்கம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, கடலூர் மாவட்டம் ஏற்பாடு செய்திருந்த பயிலரங்கம் 08-08-2026 சனிக்கிழமையன்று மாலை 5 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

கடலூர் மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற இப்பயிலரங்கத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கடலூர் மாவட்டச் செயலாளர் சு.முரளி அனைவரையும் வரவேற்றார். துணைப்பொதுச் செயலாளரும், வடக்கு மண்டலப் பொறுப்பாளருமான இரா.உமா பயிலரங்கத்திற்குத் தலைமை தாங்கினார். திராவிட முன்னேற்றக் கழகக் கடலூர் மாநகரச் செயலாளர் கே. எஸ். ராஜா, கடலூர் மாநகர மேயர் சுந்தரி ராஜா, திமுக கழகத்தின் தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள. புகழேந்தி, தமிழ் சங்கத் தலைவர் பேராசிரியர் குழந்தைவேலனார், தமிழ் சங்கப் பொறுப்பாளர்கள் அன்பன் சிவா, எழிலேந்தி, விடுதலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.






நிறைவாகத் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் "திராவிட இயக்கமும், பண்பாட்டு மாற்றங்களும்" என்ற தலைப்பில் பயிலரங்க உரையைச் சிறப்பாக நிகழ்த்தினார். இந்நிகழ்வில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை அமைப்புச் செயலாளர் எட்வின், தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் பிரவீன், தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச்செயலாளர் க.த.மணியம்மை ஆகியோர் பேரவைத் தலைமையில் இருந்து கலந்து கொண்டனர். தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர் விடுதலை நன்றியுரையுடன் பயிலரங்கம் நிறைவுபெற்றது

# “பிள்ளைபெறும் இயந்திரமல்ல பெண்கள்!” பெரியாரைப் படியுங்கள்

முனைவர் காந்தி பாபு

தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்து வருவதைக் காரணம் காட்டி, “தம்பதியர் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்” என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் கூறியிருப்பது, தமிழ்நாட்டின் சமூகநீதி, பகுத்தறிவு, பெண்ணுரிமை மரபை கேலிக்கூத்தாக்கும் பிற்போக்குத்தனமான அணுகுமுறை!



மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் வாயிலிருந்து வெளிவரும் இத்தகைய கருத்து, பெண்களின் உடல், சுய உரிமை, குடும்பத் திட்டமிடல் ஆகியவற்றை மீதான உலகளாவிய பெண்ணிய சிந்தனைக்கு முற்றிலும் முரணானது. அதைவிட வேதனைக்குரியது, இது இந்துமகா சபைஆர்.எஸ்.எஸ். போன்ற பிற்போக்கு இயக்கங்களின் “அதிக குழந்தைகள் வேண்டும்” என்ற குரலை அப்படியே எதிரொலிப்பது போல அமைந்திருப்பதுதான்.

அமைச்சர் அருண் ராஜுக்கு ஒரு எளிய கேள்வி:

கொள்கைத் தலைவர் தந்தை பெரியார் குழந்தைப் பிறப்பு குறித்து என்ன சொன்னார் என்பது தெரியுமா?

1930-களிலேயே பெரியார், பெற்றோர் தங்களுடைய சக்திக்கும் தகுதிக்கும் ஏற்ற அளவில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், குழந்தைப் பிறப்பை அளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்துவது வெறும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக்கான திட்டமல்ல; பெண்களின் உடல்நலம், கல்வி, சுயமரியாதை, பொருளாதார சுதந்திரம் மற்றும் சமூக விடுதலை ஆகியவற்றோடு தொடர்புடையது என்பதே பெரியாரின் சிந்தனை.



பெண்ணை வெறும் “பிள்ளை பெறும் இயந்திரமாக” பார்க்கும் சமூக அமைப்பை பெரியார் கடுமையாக எதிர்த்தார். பெண்கள் தங்கள் உடல் குறித்து தாங்களே முடிவெடுக்க வேண்டும்; குழந்தைப் பேற்றைத் தள்ளிப்போடவும், அளவோடு பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு உரிமையும் அறிவும் இருக்க வேண்டும் என்ற முற்போக்குச் சிந்தனையை அவர் முன்வைத்தார்.

இன்று உலகம் பெண்களின் இனப்பெருக்க உரிமை, குடும்பத் திட்டமிடல், பாலின சமத்துவம், தாய்மார்களின்உடல்நலம்ஆகியவற்றை மையமாக வைத்துக் கொள்கைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டின் நல்வாழ்வுத் துறை அமைச்சரோ “அதிக குழந்தைகள் பெற வேண்டும்” என்ற பிற்போக்குத்தனமாகப் பேசுவது மிகுந்த முரண்பாடு மட்டுமல்ல, அறமற்ற செயலாகும்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை குறித்து கவலைப்படுவதற்கு முன், தமிழ்நாட்டுப் பெண்களின் நல்வாழ்வு குறித்து சிந்தியுங்கள்!

பிறப்பு விகிதத்தை உயர்த்துவது அரசின் இலக்காக இருக்கக் கூடாது.

பெண்கள் விரும்பியபடி வாழும் உரிமை, ஆரோக்கியமான தாய்மை, குழந்தைகளுக்குத் தரமான கல்வி, ஊட்டச்சத்து, பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவையே மக்கள் நல்வாழ்வின் உண்மையான அளவுகோல்கள்.

பெரியார் வாழ்ந்த காலத்திலேயே குடும்பக் கட்டுப்பாடு, பெண்களின் உரிமை, கர்ப்பத் தடுப்பு ஆகியவற்றைப் பற்றி அவர் பேசியிருக்கிறார். அந்தக் காலத்திற்கே முன்னோக்கிய சிந்தனையைக் கொண்டிருந்த பெரியாரின் மண்ணில் இன்று “இன்னும் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று அறிவுரை கூறுவது அபத்தமாகும்.

அமைச்சர் அருண் ராஜ் பெரியாரின் பெயரை மட்டும் அறிந்திருந்தால் போதாது; பெரியாரின் கொள்கையையும் படிக்க வேண்டும்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மௌனம் கலைப்பாரா விஜய்?

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற விஜய் நூறு நாள்கள் ஆட்சி செய்து முடித்துவிட்டார். அதாவது மூன்று மாதங்கள் முடிந்துவிட்டன.

பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி ஸ்டாலின் ஆட்சிக்கால சட்டமன்றங்களில் நகைச்சுவை, கலகலப்பு, பொருள் பொதிந்த விவாதங்கள், அமைச்சர்களின் பொறுமையான, பொறுப்பான பதில்கள் இருக்கும், அங்கே.

விஜய்யின் நூறுநாள்கள் ஆட்சியின் சட்டமன்றங்கள் அப்படி ஒன்றும் குறைந்ததாகத் தெரியவில்லை.

சரியான செய்திகளைப் பேசமாட்டார்கள் தவெக உறுப்பினர்கள். அதையும் சரியாகப் பேசமாட்டார்கள். நன்றாகத் தெரிந்திருந்தும் பொய்களை அள்ளி விடுவார்கள். நாலாயிரத்தி முன்னூற்றி இருநூற்றி..........என்பார்கள் அமைச்சர்கள், சிலர் மன்மத நன்றி சொல்வார்கள், தமிழில் கூட சரியாகப் படிக்கத் தெரியாமல் உளறிக்கொட்டிக் கொண்டு, நான் பிறப்பால் கிருஸ்துவன் என்பார் ஒரு மந்திரி.

முதலமைச்சரோ 'அப்பாவைக் காணோம்' என்பார் ஒரு சைகையுடன், பிறகு 'முடிந்தது' என்பதுபோல இன்னொரு சைகை செய்வார்- ஆனால், அவர் பேசவே மாட்டார்.

சபாநாயகர் ? கேட்கவே வேண்டாம், தவெககாரர் போலத்தான் இருக்கிறார் போலும்.

இந்த நூறு நாள் ஆட்சியில் கொலைகள், கொள்ளைகள், சிறுமிகள் உள்பட பாலியல் வன்கொடுமைகள், கடும் மின்வெட்டு, குடிநீர் தட்டுப்பாடு, முதல்வர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி விவசாயிகள் போராட்டங்கள், போக்குவரத்துத் துறையில் உ.பி. மாநிலத்தவர்களை நியமிக்க டெண்டர், சேலம் அரசுப்பள்ளியில் தமிழ் தெரியாத வடமாநித்தவர்கள் ஆசிரியர்களாக நியமனம் என்று

அலங்கோலமான ஆட்சியாக நூறுநாள்களை அதாவது மூன்று மாதங்களை நிறைவு செய்துவிட்டார் முதல்வர் விஜய் என்றால் என்ன, சும்மாவா?

இனிவரும் காலங்களிலாவது சட்டமன்றம் மக்களுக்காக நடைபெறவேண்டும். மக்களுக்கான ஆட்சியாக, மக்கள் நலம் பேணும் ஆட்சியாக இருக்க வேண்டும்.

ஜனநாயகம் போஸ்டரில் இருந்தால் பயனில்லை. நடைமுறையில் இருக்க வேண்டும்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

தமிழ்நாட்டின் சமூகநீதி அரசியலைப் புரிந்துகொள்ளாமல், பிற்போக்குச் சக்திகளின் மக்கள் தொகை அரசியலை எதிரொலிப்பதை நிறுத்த வேண்டும்.

பெண்ணின் உடல் — அவளுடைய உரிமை.

குழந்தைப் பேறு — அவளுடைய தேர்வு.

குடும்பத் திட்டமிடல் — குடும்பத்தின் உரிமை.

மக்கள் நல்வாழ்வு — அரசின் பொறுப்பு.

இதைக் கூட புரிந்துகொள்ளாத மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் அவர்களே!

பெரியாரைப் படியுங்கள்;

பெரியாரின் பெயரைச் சொல்லி பெரியாருக்கு எதிரான கருத்துகளைப் பேசாதீர்கள்!

பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் சிந்தனையிலும் தொலைநோக்குப் பார்வையிலும் திட்டமிடலிலும் கட்டமைப்பிலும் வலுவாக நிற்கும் தமிழ்நாட்டில், ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துமகா சபையின் பிற்போக்கு அரசியலை எதிரொலிக்கும் வகையிலான கருத்துகளுக்கு இடமில்லை.

பெரியாரின் பெயரை உச்சரிப்பது மட்டும் பெரியாரின் கொள்கையைப் பின்பற்றுவதாக ஆகாது.

பெரியார் பெண்களுக்கு அளித்த சுயமரியாதையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பெரியார் வலியுறுத்திய பகுத்தறிவைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பெரியார் எதிர்த்த பிற்போக்குத்தனத்தை அடையாளம் காண வேண்டும்.

இல்லையெனில், வரலாறு கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும்.